

அமைச்சர் சிவசங்கர்



நிர்மல்ராஜ் ஐ.ஏ.எஸ்.

அனுப்புனர் :

N. நெல்லை கோபால் ,
மூத்த பத்திரிகையாளர்,
771/1, சாம்டவர், முனுசாமி சாலை ,
கே.கே.நகர். சென்னை – 600 078.
9994478389

பெறுநர் :

உயர்திரு.மாண்புமிகுக்கள், அரசு செயலர்கள், ஊழல் தடுப்பு இயக்குனர், போக்குவரத்து ஆணையர் அவர்கள் ஆகியோருக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

அய்யா, மூத்த பத்திரிகையாளரான நெல்லை கோபாலின் பணிவான வணக்கங்கள்.

பொருள்: போக்குவரத்து துறையில் கடந்த 30–01–2022–ல் NT(NON-TECHNICAL)கள் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வுக்கான 9 பேர் பட்டியில் அடங்கிய உத்தரவுகள் வெளியீட்டு, அதில் காலியாக இடம் இருந்த இடத்தில் கடந்த முன்றாவது மாதத்தில் நான்கு பேரை பணியமர்த்திவிட்டு, மீதம் உள்ள 5 பேரை இதுவரை கடந்த ஒன்பது மாதமாக எங்கும் பணியமர்த்தாமல், தற்போது பத்துக்கு மேற்பட்ட இடங்கள் காலியாக இருந்தும் 2021–2022–ம் வருடத்தில் வெளியிட்ட பேனலில் பதவி உயர்வுக்கான காத்திருப்பு பட்டியலில் உள்ள மீதம் உள்ள ஐந்து பேரை பணியமர்த்தாமல், 2022 – 2023–ம் வருடத்திற்கான பட்டியலுக்குரிய பேனலை கோரி, எழிலக நிர்வாகம் பல கோடிகளை பேரம் பேசி ஊழல்களை தொடர உள்ளதால் ஏற்கனவே 2021–2022–ன் பேனலில் வெளியிட்ட பதவி உயர்வுக்கான காத்திருப்பு பட்டியலில் உள்ள அந்த ஐந்துபேர்களுக்கு முதலில் பதவி உயர்வு கொடுப்பதும், அதன் பின் 2022–2023–ற்கான பதவி உயர்வுக்கான பேனல் பட்டியலை உருவாக்கி நியாயமான முறையில் பதவி உயர்வையும், பணியிட மாற்றத்தையும் வழங்க கோருவது தொடர்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

இத்தோடு இணைக்கப்பட்டிருக்கும் 2021–2022 ஆம் ஆண்டிற்கான MVI (NON-TECHNICAL) பதவி உயர்வுக்கான– PANEL கடந்த 31–01–2022–ல் வெளியிடப்பட்டு, அதற்கான VALIDITY 30.01.2023 வரை நிர்வாக சீர்திருத்தத் துறை சட்டவிதிப்படி நடப்பில் உள்ளது. அதாவது இந்த பேனல் காலாவாதியாவதற்கு இன்னும் ஆறு மாதம் காலம் முழுக்க உள்ளது.

இது ஒருபுறம் இருந்தாலும், 2021–2022–ம் வருட Approved Panel–ஆனது 9 மாதங்களுக்கு பிறகு தாமதமாக தான் வெளியிடப்பட்டுள்ளது. இந்த லட்சணத்தில் செயல்பட்டுவரும் JTC வெங்கட்ராமனின் நிர்வாகத்தை இனியும் போக்குவரத்து துறையின் அமைச்சகம் அனுமதிக்கிற பட்சத்தில் இந்த அதிரடியான நிர்மல்ராஜ் IAS அவர்கள் மட்டுமல்ல, இவரை போன்ற பல IASகள் வந்தாலும் போக்குவரத்து துறையை சிறப்படைய செய்து விபத்தை தடுப்பது என்பது குதிரைக்கு கொம்புமுளைத்த கதையாகத்தான் இருக்கும், சரி விஷயத்திற்கு வருவோம்.

தற்போது மேற்கண்ட 2021–2022–ல் வழங்கப்பட்ட இந்த PANEL list–ல் உள்ள பெயரில் எண் 1–ல் இருந்து நான்கு வரை உள்ளவர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கப்பட்டு அந்த அதிகாரிகளுக்கும் அவரவர்களுக்குரிய செக்போஸ்ட் பணிக்குரிய இடங்களிலும் அந்த அதிகாரிகள் அமர்த்தப்பட்டனர்.

**Proceedings of the Transport Commissioner, Chennai-5.**
**Present: Thiru. S.Natarajan, I.A.S.,**
**R.No.11234/RA1/2021 (E.O.No.55/2022) Dated:31.01.2022.**

**Sub:** Establishment – Transport Department – Panel of fully qualified Superintendents fit for promotion to the post of Motor Vehicles Inspector (Non-Technical) for the panel year 2021-2022 –**Considered**- Approved- Orders issued.

**Ref:** 1. Seniority List published in this office of even number dated: 26.04.2021.
2. Panel proforma particulars received from the concerned Officers.

*****

**ORDER:**

According to the provisions of section 7(1) of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016, the names of 40 Superintendents have been considered for inclusion in the regular panel of fully qualified Superintendents fit for promotion to the post of Motor Vehicles Inspector (Non-Technical) for the panel year 2021-2022.

2. Consequently, the names of the following Superintendents are included in the panel of Superintendents fit for promotion to the post of Motor Vehicles Inspector (Non-Technical) for the panel year 2021-2022, in the order as indicated below.

| Sl.No. | Name of the Superintendent | Office in which working |
|---|---|---|
| 1 | M.Murugeshwari | RTO, Chennai (South West) |
| 2 | P.Nandakumaran | RTO, Cuddalore |
| 3 | J.Loganathan | RTO, Arani |
| 4 | G.Kumar | U.O., Vedasandhur |
| 5 | C.V.Kumar | RTO, Hosur |
| 6 | CH.Prabakaran | U.O.,Thuraiyur |
| 7 | K.Swaminathan | RTO, Tiruvallur |
| 8 | R.Swaminathan | RTO, Tiruchendur |
| 9 | C.Sathish Jeyachandran | RTO, Coimbatore (Central) |

3. The individuals are requested to acknowledge the receipt of this order at once.

Sd.S.Natarajan,
Transport Commissioner,
Chennai.

To
The individuals concerned.
(Through the Officers concerned)
Copy to :
1. The Zonal Officers concerned.
2. The Regional Transport Officers Concerned.
3. P.C. to TC/JTC(A).
4. E.O.Book/ Spare.

// By order//

31/01/2022
Joint Transport Commissioner (A),
Chennai-05.

31/1/2022

NT– பதவி உயர்வுக்கான 31.01.2022ற்கான பட்டியல் மற்றும் 5, 6, 7, 8, 9 பதவி உயர்வுக்கான முன்நிலையில் இருப்பவர்களுக்கான பேனல் பட்டியல்.

அதில் மீதம் உள்ள ஐந்து பேர் பதவி உயர்வுக்கான காலியிடங்கள் இல்லாததால் காத்திருப்பு பட்டியலில் நிறுத்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து தற்போது நிரப்ப உள்ள காலியான MVI (NT) பதவி உயர்வுக்கு கூட, இந்த காத்திருப்பு பட்டியலில் உள்ள தொடர்வரிசையில் மீதம் உள்ள திருவாளர்களான

1) CV குமார் 2) CH. பிரபாகரன் 3) K. சுவாமிநாதன் 4) R. சுவாமிநாதன் 5) C. சதிஷ் ஜெயசந்திரன் ஆகியோர்கள்தான் தற்போதுள்ள காலி இடத்தினை நிரப்பக்கூடியதற்குரிய முதன்மையானவர்களாக உள்ளனர் என்பதை மேற்கண்ட பதவி உயர்வுக்கான பேனலில் உள்ள பெயர்களே பறை சாற்றுகின்றன. (பார்க்க: (2021–2022–க்கான பேனல் ஆர்டர்)

ஆனால், இந்த பேனலையே முடக்கி விட்டு, மீண்டும் மற்றொரு புதிய பேனலை உருவாக்கி அறிவிக்க கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு 17–09–2022 மற்றும்18–09–2022 – ஆகிய இரு தேதிகளில் ஒரு கலந்துரையாடலை எழிலகத்தில் உள்ள முக்கிய அதிகாரி ஒருவர் அறையில் ஊழல் அதிகாரிகளான அட்மின் வெங்கட்ராமன், ரகு, முரளிதரன் மற்றும் சிலருடன் சேர்ந்து இதனை பணமாக்க பெரும் சூழ்ச்சியினை அரங்கேற்றி ஒரு முடிவுக்கு வந்துள்ளனர்.

இதில் அதிரடியான ஆணையர் பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையில் மேற்கண்ட ஊழல் அதிகாரிகள் பேசியதற்கான தகவல்கள் வந்ததாலும், அது உண்மை அல்ல என்பதை முறைகேடாக பதவி உயர்வு பெற கோரும் அந்த அதிகாரிகள் அறிவதற்கும், மற்றும் ஆணையரை அவதூறாக்கும் அந்த உரையாடல்களில், மேற்கண்ட ஊழல்வாதிகளின் பேச்சுக்களில் உண்மைகள் இல்லை என்றபோதிலும், இதனை ஆணையர் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்த பதிவுகளும் ஆணையர் விழிப்புடன் இருக்கவே இந்த பதிவையும் செய்து கொள்கிறோம்.

அதாவது முறைப்படி 31–01–2022–ல் வெளியிட்ட ‘பேனல்’ படி அப்போது காலியாக இருந்த இடத்திற்கு, கடந்த 11–03–2022–ல் 1)திருமதி. முருகேஷ்வரி, திருவாளர்களான

2) P. நந்தகுமரன், 3) J. லோகனாதன், 4) G. குமார் ஆகியோர் ஆகிய நான்கு பேரும் மற்றும் நீதிமன்ற உத்தரவு பெற்ற திரு. ஜெயபிரகாஷ் என்பவரும் பதவி உயர்வு பெற்று செக்போஸ்ட்டில் NT ஆய்வாளராக பணியிடமாற்றம் செய்யப்பட்டு பொறுப்பேற்று நல்ல முறையில் பணிபுரிந்து வருகின்றனர்.

அப்படியிருக்கிற நிலையில், இதே வருடத்தில் மீதமுள்ள 2021 – 2022 Panel–ல் பதவி உயர்வுக்காக காத்திருப்பு பட்டியலில் உள்ள CV.குமார், CH.பிரபாகரன், K.சுவாமிநாதன்,

R.சுவாமிநாதன், C.சதீஷ் ஜெயசந்திரன் ஆகியோர் பதவி உயர்வுக்கான நிலுவையில் இதுவரை எந்தவித குற்றங்களுக்கும் ஆளாகாமல் இருக்கின்ற முதன்மை நிலையில் உள்ளவர்களை நியமிக்காமல், புதிதாக 2022 – 2023 Panel–ஐ உருவாக்கி, பலரிடம் பதவி உயர்வுக்கான பல பல லட்சங்கள் கோடிகளாக பெறப்படுவதற்காக அட்மின் வெங்கட்ராமன் உதவியோடு மற்றும் 'போலி' சங்க மேற்கண்ட பொறுப்பாளர்களால் அதிரடியான போக்குவரத்து ஆணையருக்கு ஒரு கோப்புகள் நகர்த்தப்பட உள்ளது. (ஏனெனில் வருகிற தீபாவளியில் நடக்கும் ரெய்டுகளில் விஜிலென்ஸ் போலிசார் வந்ததற்கு ஏதாவது ஒரு கேஸ் உன் மேல் எழுதினால் நீ என்ன செய்வாய் என போலி சங்க பொறுப்பாளர்களால் கேள்விகளை எழுப்பப்பட்டு பலரையும் இவர்களது வலையில் விழ வைத்து வருகின்றனாராம்.)

எனவே, அந்த முறையற்ற கோப்புகளுக்கான ஒரு தடையினை ஏற்படுத்தவும், இந்த வருடத்திற்கான அதாவது 2021– 2022–ல் பதவி உயர்வுக்காக வெளியிட்ட பேனல் நிர்வாக சீர்திருத்த சட்டவிதிகளுக்கு உட்பட்டு, Asper rule 14 of Tamil Nadu Ministerial Service Rule –ன்படி நிலுவையில் உள்ள முறையான அந்த ஐந்துபேர்களுக்கு பதவி உயர்வு வழங்கவும் ஆணையர் கவனத்திற்கு நம்மால் உரிய நடவடிக்கைக்காக பணிந்து தெரிவிக்கப்படுகிறது. (பார்க்க: RULE 14) (ஆம், கடந்த ஒன்பது மாதங்களாக பதவி உயர்விற்காக காத்திருக்கும் இவர்களுக்கும் மேலே கூறிய போலி சங்க பொறுப்பாளர்கள் சொன்னது போல் இவர்களும் எச்சிரிக்கையாக இருக்க வேண்டிய நிலை என்பதால், நியாயமான இவர்களது கோரிக்கை நிறைவேற்றபடுகிறபோது இதுவரை வழக்குகள் இல்லாமல் பதவி உயர்வான பட்டியலுக்குள் வந்த அதிரடியான இவர்களது உழைப்புக்கும் உண்மைக்கும் கிடைத்த பரிசுதான் இருக்கும் அவர்களது பதவி உயர்வு.)

**PROCEEDINGS OF THE TRANSPORT COMMISSIONER, CHEPAUK, CHENNAI-5.**
**PRESENT: THIRU. S.NATARAJAN, I.A.S.**

Procs. No.11234/RA1/2021 (E.O.No.138/2022) Dated:11.03.2022

Sub: Establishment – Transport Department- Superintendent fit for promotion to the post of Motor Vehicle Inspector (Non-Technical) for the panel year 2021-22- Included in the panel- Promotion and Postings- Orders- Issued.

Ref:
1. G.O.No.249, Finance (Budget General-I) Department, dated.21.05.2020.
2. Government Letter No.15157/S1/2020-1, Personnel and Administrative Reforms Department, dated.12.09.2020.
3. Proceedings of the Transport Commissioner, Chennai in R.No. 11234/RA1/2021, (E.O.No.55/2022), dated.31.01.2022.

********

**ORDER:**

In pursuance to the orders issued by the Transport Commissioner, Chennai in the reference 3rd cited, the following Superintendent is promoted as Motor Vehicles Inspector (Non-Technical) and posted to the place indicated against his name with immediate effect, as per the instructions issued by the Government in G.O. 1st read above.

| Sl. No | Name of the Superintendent (Tvl.) | Present Working Station | Promoted as Motor Vehicle Inspector(NT) and posted to |
|---|---|---|---|
| 1. | G.Kumar | U.O.Vedasand hur | Bannari CP (in place of K.Subburathinam) |

2. Certified that the above individual is fully qualified to hold the post of Motor Vehicle Inspector (NT) under F.R. 22(b) w.e.f. the date of joining duty as Motor Vehicles inspector (NT) in the new station.

3. The Controlling Officer concerned is directed to relieve the individual immediately without waiting for any substitute. The date of relieving / joining of the individual should be intimated to this office immediately.

4. Further, the Controlling Officer is also directed to strictly adhere the instructions issued in the Transport Commissioner's Circular No.19/2006, dated 02.08.2006; Circular No.37/2017, dated 24.04.2017 and Rule 67 of the Tamil Nadu Fundamental Rules, without any lapses. The eligibility for allowances shall be subject to the instructions / clarifications issued in the references 1st and 2nd cited.

Sd.S.Natarajan,
Transport Commissioner,
Chennai-5.

To
The Individual
(through the officer concerned.)
Copy to :
1. The Joint Transport Commissioner, Madurai.
2.The Deputy Transport Commissioner, Erode.
2.The Regional Transport Officer, Dindigul/ Gobichettypalayam.
3.PC to TC/ JTC(A)/ DTC(A).
4.E.O.Book/ Spare-2.

// By order//

11/03/2022

Joint Transport Commissioner (A),
Chennai-5.

பேனலின்படி கடைசியாக 4. வரிசையில் பதவி உயர்வு பெற்ற குமாரின் உத்தரவுக்கான நகல்

இதில் மேற்கண்ட 2021 – 2022–ல் வெளியிட்ட Panel ஆனது 30–01–2023 வரை நிர்வாக சீர்திருத்த துறை சட்ட விதிப்படி எயடனைவைல, அதாவது எந்தவித காலாவதியாகமலும், அந்த panel–லுக்கு உயிர் இருக்கிறபோதே, அந்த panel–ல் பதவி உயர்வுக்காக காத்திருப்பு பட்டியலில் உள்ள ஐந்துபேர் நிலுவையில் இருக்கிற நிலையில், அவர்களுக்கு MVI (NT) பதவி உயர்வு வழங்காமல், அதனை அப்படியே நிறுத்தி வைத்து, 2022–2023–க்கான புதிய panel–யை முறைகேடாக உருவாக்க முயலுகின்றனர் மேற்கண்ட ஊழல் அதிகாரிகள். அதற்கான நடைமுறைகளில் போக்குவரத்துறை

rule 14 of Tamilnadu ministerial Service Rule read as

**list of approved candidates-candidates unallotted**

.............when list of approved candidates are prepared and have not been appointed to the service, shall in the order in which they are arranged in that list, be included and be placed at the top of the fresh list or if no fresh list is prepared for , that departmental unit the current list containing only the names of such of the candidates as have not been appointed to the service shall in the order in which they are arranged therein, be published as a fresh list for that unit.

சட்டவிதி 14.

நிர்வாக ஆணையரான ஊழல் அதிகாரி வெங்கட்ராமன் படுவேகமாக செயல்களில் இறங்கியுள்ளார்.

ஏற்கனவே நிலுவையில் உள்ள 2021– 2022–ல் உள்ள பதவி உயர்வுக்கு காத்திருப்பு பட்டியலில் உள்ள அதிகாரிகளுக்கு பதவிஉயர்வு கொடுக்காமல், புதிதாக சில கோடிகளை லஞ்சமாக சம்பாதிக்க, அதுவும் 2021–2022–ல் அறிவித்த நிலுவையில் உள்ள யீயநேட–லை முடக்கிவிட்டு, அடுத்த 2022 – 2023–ம் வருடத்திற்கான புதிய panel–லை உருவாக்கி அவர்களுக்கு பதவி உயர்வு வழங்க மேற்கண்ட ஊழல் அதிகாரிகள் ஆலோசனை செய்வதும், ஆணையரை ஏமாற்றி கோப்புகளை நகற்றுவதற்கும் தயாராகி விட்டனர் மேற்கண்ட கொள்ளை கூட்டணியினர்.

இது ஒரு புறம் இருந்தாலும், இப்போது 2021–2022–க்கான பதவி உயர்வுக்குரிய பட்டியலில் உள்ள நியாயமான அந்த ஐந்துபேருக்கான பதவி உயர்வு நிலுவையில் இருக்கிறபட்சத்தில், இப்போது 2022–2023–ம் வருடத்திற்கான panel பட்டியலின் அவசியம் என்ன ? அதே நேரத்தில் காலியான இடங்கள் கூடுதலாக இருக்கிறது. எனவே, அடுத்த வருட பேனலையும் சேர்த்து பதவிக்குரியவர்களை தேர்ந்தெடுக்கலாம் என ஊழல் அதிகாரிகளின் வாதமாக இருந்தால், ஏற்கனவே 2021–2022–ல் உருவாக்கப்பட்ட பேனலில் நிலுவையில் உள்ள அந்த ஐந்து பேரான குமார், பிரபாகரன், சுவாமிநாதன், மற்றொரு சுவாமிநாதன், சதிஷ் ஜெயச்சந்திரன் ஆகியோருக்கு முதலில் பதவி உயர்வுகளை வழங்கி விட்டு, அதன் பின்னர் 2022–2023–க்கான பேனலுக்குரிய பட்டியலை கோரலாமே ? அதற்கான நடைமுறைகளை அட்மின் வெங்கட்ராமனால் இதுவரை ஏன் கோரப்படவில்லை ? இந்த ஐந்துபேரின் பதவி உயர்வுக்கு தற்போது வரை இவர் ஏன் ஆணையருக்கான கோப்புகளை உருவாக்கவில்லை ? காரணம் இந்த ஊழல்வாதிகளின் பேரங்களை சம்பந்தப்பட்டவர்கள் விரும்பாததாலா அல்லது இவர்களிடம் ஏதும் கோரிக்கை வைத்தால் சிக்கி விடுவோம் என்ற பயமா ? இது போலி சங்க பொறுப்பாளர்களுக்கே வெளிச்சம்.

அதேபோல் 2021–2022–க்கான உரிய பேனலில் பதவி உயர்வுக்காக காத்திருக்கும் பட்டியலில் உள்ள ஐந்துபேருக்கு கடந்த ஒன்பது மாத காலமாக பதவி உயர்வு வழங்கப்படாமல், தற்போது 2022–2023–ம் ஆண்டு பதவி உயர்வுக்கான பட்டியலை கோர அட்மின் மற்றும் போலி சங்க பொறுப்பாளர்களால் நடத்தப்பட்டுவரும் முறைகேடுகள் குறித்து அதிரடியான ஆணையர் நிர்மல்ராஜ் IAS மற்றும் விஜிலென்ஸ் போலீசார்களும் உரிய ஆய்வு செய்யப்பட்டு ஊழலுக்கு வழிவகுக்கும் மேற்படியாளர்களின் முறைகேடுகளை தடுத்து, உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அதாவது தற்போது 2021–2022 பதவி உயர்வுக்கான வெளியிட்ட பேனலில் இடம்பிடித்த ஐந்து பேரிடம் லஞ்சம் பேராததால் அவர்களுக்கு வழங்க வேண்டிய பதவி உயர்வுகள் வழங்கப்படாமலும், அதனை கடந்த ஒன்பது மாத காலமாக நிறுத்திவைத்த ஊழல் அதிகாரிகள் தற்போது அந்த பேனலையே முடக்கி விட்டு, தற்போது 2022–2023க்கான பதவி உயர்வுக்கான பேனலை மேற்கொண்டு வரும் எழிலக நிர்வாகம், இந்த இடைப்பட்ட ஒன்பது மாதங்களில் ஏற்கனவே நிலுவையில் இருந்த, பல்வேறு அதிகாரிகள் மீதுள்ள துறை ரீதியான நடவடிக்கைகள் மற்றும் விஜிலென்ஸ் வழக்குகளையும் முடிக்க செய்து, அனைத்து வழக்குகளையும் நீர்த்து போகச் செய்தில்,

தற்போது கூடுதலாக சில அதிகாரிகளும் பதவி உயர்வுக்கான இந்த வருட பட்டியலில் ( 2022 – 2023) இடம்பிடிப்பதால், ஏற்கனவே 2021–2022–ல் இடம் பெற்று பதவி உயர்வுக்காக கோரப்பட்டு வந்த, அந்த ஐந்து பேரையும் பின்னுக்கு தள்ளி சினியார்ட்டிபடி முன்னிலையில் 2022– 2023–ம் பேனலில் உள்ளவர்கள் வந்து விட்டதாக கூறி லஞ்சத்தை பெற்றுக்கொண்டு முறைகேடாக பதவி உயர்வை வழங்க உள்ளனர்

ஆனால், இவர்களுக்கு முன்பு 2021 – 2022–ன் பதவி உயர்வுக்கான பேனலில் இடம்பெற்றவர்கள் எந்த வழக்குகளையும் பெறாமல், நியாயமான முறையில் அதிகாரிகளின் நன்மதிப்புகளை பெற்று நடப்பில் உள்ள 2021–2022–லே பதவி உயர்வுக்கான பட்டியலுக்குள் வந்த ஒன்பது பேரில், ஐந்து பேருக்கான இடங்களே காலியாக இருந்ததால் சிலர் பதவி உயர்களை பெற முடியாமல் காத்திருப்பு பட்டியலுக்குள் சென்றனர்.

ஆனாலும் கடந்த 30–01–2022–அதாவது ஒன்பது மாதத்திற்கு முன்பே பதவி உயர்வுக்கு வந்தவர்கள்தான் முறையான சீனியார்ட்டி என்றாலும், அன்று பணியிடங்கள் காலியாக இல்லாததால் தற்போதுவரை இவர்கள் நிலுவையில்காத்திருக்கும் காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர். ஆனால் தற்போது 2022– 2023 வருட பேனலை அறிவித்து தண்டனைக்கான வழக்கில் இருந்து விடுபட்டவர்களை உசுப்பி விட்டு, நீங்கள் தான் சீனியர் என்றும், இப்போது கடந்த 2021–2022–ல் வெளியிடப்பட்ட பட்டியலுக்குள் சென்றவர்களை விட நீங்கள்தான் சீனியர் என்று ஆணையரிடம் உங்களது குற்றவழக்குகளால் அப்போது நீங்கள் பின்னுக்கு சென்ற விபரத்தை கூறாமல், மறைக்க வேண்டியதை எல்லாம் மறைத்து உங்களது கோப்புகளை முன்வைத்து, மேற்கண்ட பதவி உயர்வை பெறுவதற்கான 2021–2022க்கான காத்திருப்பில் உள்ள ஐந்துபேரின் பதவி உயர்வுகளை நாங்கள் பின்னுக்கு தள்ளிவிடுகிறோம்

எனவே, நாங்கள் கோருகிற பணத்தை தந்து விடுங்கள் என கோரி அதற்கு பல லட்சங்களும் மற்றும் பணியிட மாற்றத்திற்கான தேவைக்குரிய இடங்களுக்கு தனியாக பல லட்சங்களும் ஆக 40, 50 லட்சங்கள் தலைக்கு பேசப்பட்டு ஊழல் அதிகாரிகள் மற்றும் ''போலி'' சங்க பொறுப்பாளர்களாலும் ஆணையருக்கு தெரியமால் ஒரு ஊழல் வியபாரத்தை நடத்தி ஆணையருக்கே ஒரு களங்கத்தை உருவாக்க அரங்கேற்றத்தை தொடங்கி விட்டனர்.

எனவே, பதவி உயர்வுக்கான தேர்வாளர்களுக்குரிய பட்டியலில் முதலில் எந்த வழக்குகளும் இல்லாமல், நன்முறையில் பணியாற்றி, தனது உயர் அதிகாரிகளிடத்தில் நன்மதிப்பை பெற்று நடப்பாண்டான 2021–2022–ல் பதவி உயர்வுக்கான பட்டியலுக்குள் ஒன்பது மாதத்திற்கு முன்பே வந்து காத்திருப்பு பட்டியலில் உள்ள அந்த ஐந்துபேருக்கான பதவி உயர்வை நேர்மையான முறையில் லஞ்சம் தவிர்த்து பெற்று விட, அதிரடியான ஆணையரும், விஜிலென்ஸ் அதிகாரிகளும் ஒருசேர கரம் கொடுத்து, அரசு செயலர்களின் சீரான பார்வையில் சீர்தூக்கி பார்த்து, மேற்கண்ட கோப்புக்கு நல்லதொரு விடியலை கொடுக்க வேண்டும் அரசு அதிரடி காணுமா ? பொறுத்திருந்து பார்ப்போம்.

பணிவன்புடன்

நெல்லை கோபால்
மூத்த பத்திரிகையாளர்

25.08.2022

9994478389